
www.tamilarangam.net

# வசந்தன் எங்கே?



ச. அ. டேவிட்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வசந்தன் எங்கே?

வசந்தன் என்று அழைக்கப்படும் சந்ததியார் 1951-ல் யாழ்ப்பாணத்தில் சுழிபுரம் என்ற கிராமத்தில் பிறந்தவர். இவர் மாணவராயிருக்கும் பொழுதே தந்தை செல்வாவின் தமிழ் ஈழ சுதந்திரத் தீயில் குதித்துத் தம் வாழ்வை முற்றும் முழுதும் தமிழ் ஈழ விடுதலைக்காக அர்ப்பணித்து அல்லும் பகலும் அயராது உழைத்து வந்தார்.

இவர் மிகவும் ஆழ்ந்த சிந்தனையாளராகவும், தன் நுணுக்கக் கருத்துக்களைத் தெளிவாகவும், திறமையாகவும் விளக்கும் அபூர்வ சக்தியுடையவராகவும் இருந்தார்.

சிறு வயதிலேயே தமிழரசுக் கட்சி மேடைகளில் பல்லாயிரம் தமிழ் ஈழ மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டு தன்மானம், மனிதாபிமானம், சுதந்திரம் என்னும் குறிக்கோள்களை மக்களுக்கு விளக்கியவர்.

1970-ம் ஆண்டு தமிழ் ஈழ மாணவர் பேரவையில் முன்னனி அங்கத்தவராய்ச் சேர்ந்து தமிழ் ஈழ இளையரைச் சுதந்திரத் தீயில் குதிக்க வழிகாட்டினார்.

1975-ல் தமிழ் ஈழத் துரோகி யாழ்ப்பாண நகரத் தலைவர் துரையப்பா கொலை வழக்கில் ஆறாம் எதிரியாகக் கைது செய்யப்பட்டு மூன்று வருடங்கள் சிறையிலிருந்து நிரபராதியாய் விடுவிக்கப்பட்டவர்.

சிறையிலிருந்த காலத்தில் சிங்களப் புரட்சிவாதி றோகன விஜயவீரவுடனும் அவனுடைய சகாக்களுடனும்' மார்க்சீய, லெனின் இடதுசாரிக் கொள்கைகளைத் தீர ஆராய்ந்து விவாதித்து சிங்கள இனவாதக் கும்பலில் போலித் தோற்றங்களை இனங்கண்டறிந்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


1977-ல் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தினதும், தமிழர் விடுதலைக் கூட்டணியினதும் தமிழ் ஈழச் சுதந்திர கோஷத்தில் மூழ்கி, மேடையெல்லாம் ஏறி அமிர்தலிங்கத்தின் அபார வெற்றிக்காக உழைத்தார்.

1978-ல் என்னைச் சந்தித்து காந்தீயத் தத்துவங்களில் ஈடுபடத் தொடங்கினார். நாங்களிருவரும் தமிழ் ஈழ முழுமைப் புரட்சிக்காக மக்கள் சக்தியைத் திரட்டும் திட்டத்தை தமிழர் விடுதலைக் கூட்டணி முன்வைத்தோம். இத்திட்டத்தைக் கூட்டணியினர் முறியடித்தனர். கூட்டணியினர் பதவி மோகக் கும்பல் என்பதும், சுதந்திர கோஷம் வேடம் என்பதையும் நேரில் கண்ட சந்ததியார் தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து வெளியேறி காந்தீயத்துடன் முழுநேரஊழியராய்ச் சேர்ந்தார்.

1977-ல் நடந்த பயங்கர இனப் படுகொலையில் பாதிக்கப்பட்டு வடகிழக்கு மாகாணங்களில் தஞ்சம் புகுந்த பல்லாயிரம் மலையகத் தமிழ் மக்களுக்கு மறுவாழ்வளிக்கும் பணிகளில் பல இளையர்களுடன் காந்தீயத்தில் அயராது உழைத்தார்.

1979-ல் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் சிங்கள அரக்கன் ஜெயவர்த்தனாவுடன் பேச்சுவார்த்தைகளில் இறங்கி மாவட்டச் சபையென்ற மாய மானைக் காட்டி தமிழ் ஈழ மக்களை மயக்க முற்பட்ட காலத்தில் காந்தீய இயக்கம், டாக்டர் இராசசுந்தரம், சந்ததியார், நான் எல்லோரும் ஒரே குரலில் அமிர்தலிங்கத்தினரதும், கூட்டணியினரதும் சதிச் செயலை எதிர்த்தோம்.

1975-ல் துரையப்பாவின் கொலையுடன் தொடங்கிய தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் தமிழ்த் துரோகி காவல் துறை பஸ்தியாம்பிள்ளை கொலையூடாக தீயாய்ப் பற்றி எரியத் தொடங்கி ஆயுதப் போராட்டத்தின் முன்னணியில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தீவிரமாய் இயங்கினர். விடுதலைப் புலிகளுக்குள் நுழைந்த முகுந்தன் என்றழைக்கப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படும் உமா மகேசுவரன் தலைமைப் பதவிக்குத் தளம் போடத் தொடங்கினான். முகுந்தனின் சதி மனப்பான்மையை நன்கு கணித்த பிரபாகரன் முகுந்தனை வெளியேற்றினார்.

முகுந்தன் பிரபாகரனைச் சர்வாதிகாரியாக வர்ணித்து சனநாயக இயக்கத்தை ஆரம்பிக்க வேண்டும் என்று ஆசை வார்த்தைகளைக் கூறி சனநாயக வாதிகளான வசந்தன், மூர்த்தி போன்ற நல்லெண்ணம் படைத்த கபடமற்ற போராளிகளைத் தன்வசம் சேர்த்தான்.

முகுந்தன் பிரபாகரனுக்கும், சிங்களக் காவல்படைக்கும் பயந்து தலைமறைவாகிய காலங்களில் வசந்தன் முகுந்தனைத் தன் கண்மணி போல் காத்துக் காப்பாற்றி தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகத்தை வளர்த்தெடுத்ததை நான் நன்கறிவேன்.

முகுந்தனைத் தன் வீட்டில் வைத்து சாப்பாடு கொடுத்து வளர்த்து இவனுடைய மெய்க்காப்பாளாராயிருந்த சிவனேஸ்வரனை முகுந்தன் கொன்று விட்டான். அது மட்டுமல்ல. சிவனேஸ்வரனின் முழுக் குடும்பத்தையுமே அழிக்க முயற்சிகள் எடுத்து வருகிறான்.

1983-ல் சிங்கள இனவெறி தலைவிரித்தாடி தமிழ் மக்கள் கொல்லப்பட்டும், தமிழ்ப்பெண்கள் கற்பழிக்கப் பட்டும், தமிழ் பொருள் பண்டம் தீக்கிரையாக்கப்பட்டும், தமிழீழ மக்களும் விசேஷமாய் இளையரும் தமிழ் ஈழத்தை விட்டு வெளிறேிய காலத்தில் முகுந்தன் பிரபாகரனின் கொரில்லாப் போரைக் கண்டித்து, தான் முறையான படையை உருவாக்கிச் சிங்கள இராணுவத்தை முறியடிப்பேன் என்று நப்பாசை காட்டி பல்லாயிரம் தமிழ் இளையர்களைத் தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகத்தில் சேர்ந்தான். வசந்தன் நான் எல்லோரும் முகுந்தனை நம்பி எம் முழு ஒத்துழைப்பையும் கொடுத்துக் கழகத்தை வளர்த்தோம்.

1983 அக்டோபர் மாதம் சிங்களச் சிறையுடைத்து தமிழகம் வந்து சேர்ந்த நான் உலகளாவியுள்ள என் நண்பர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கள் யாவரையும் தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகத்தில் சேர வற்புறுத்திப் பணமும், பலமும் தேடிக் கொடுத்தேன்.

சிங்களப் படைகளின் சீரழிவை நன்கறிந்த நான் ஒரு வருடத்திற்குள் தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம் முழுப் போரில் இறங்கி தமிழ் ஈழச் சுதந்திரத்தைப் பெற வேண்டும் எனக் கழகக் கட்டங்களில் வற்புறுத்தி வந்தேன்.

முகுந்தனின் தனிமனிதப் போக்குகளை அவதானித்துக் கழகத்தை ஐவரைக் கொண்ட பஞ்சாயம் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று எழுத்தில் வேண்டுகோள் விடுத்தேன். முகுந்தன் தனக்கு மோசம் வரும் என்பதை உணர்ந்தான்.

தன்னைக்காப்பாற்ற உளவுக் கொலைகுப்பலைச் சேர்ந்த அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தித் தன்னை எதிர்த்தவர்களை இந்தியத் துரோகி கள் என்று கூறி இந்திய அரசின் நல்லெண்ணத்தைப் பெற முயற்சியெடுத்தான். தமிழ் ஈழ மக்கள் விடுதலைப் போராளி களைத் திசை திருப்ப இலங்கையில் நடப்பது இனக்கலவரம் இல்லையென்றும் வர்க்கப் போராட்டம் என்றும் காலங் கனிந்து புரட்சி தொடங்கலாம் என்றும் ஈழப்புரட்சிகர மாணவர் இயக்க (EROS) இரத்தின சபாபதியுடன் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தை ஆதரித்து வளர்க்க முகுந்தன் வெளிப்பட் டான். முகுந்தன் தன்னை எதிர்த்த தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகப் போராளிகளைச் சித்திரவதை முகாம்களில் வைத்து மிருகத்தனமாய்க் ககாலை செய்கிறான். தமிழ் இளையர்களை நூற்றுக் கணக்கில் கொன்று குவித்த முகுந்தன் நிக்கவரெட்டியாவில் ஒரு சிங்களக் காவல் படை யினரைக் கொன்றதற்கு மனவருத்தம் தெரிவித்து மன்னிப்புக் கேட்டான்.

இந்திய அரசை தன்வசப்படுத்தித் தன் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, கள்ளக்கடத்தல் யாவையும் மூடிமறைக்க முகுந்தன் திம்புவில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளில் ஆர்வம் காட்டி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஏனைய தமிழ் ஈழப் போராளிகளைக் காட்டிக் கொடுத்து இன்று இந்தியாவுடன் இரண்டறக் கலந்த தோழனாய் நடிக்கிறான்.

முகுந்தன் கிளிநொச்சி வங்கிக் கொள்ளையில் 2.75 கோடி ரூபாய் பெற்றார். இதைப் பனாகொடை முகாமில் என்னுடன் அடைக்கப்பட்டிருந்த 20 வயது அன்பழகன் சொன்னார். அவர் வெலிக்கடையில் கொல்லப்பட்டார். நிக்கவரெட்டியா வங்கிக் கொள்ளையில் 4 கோடி ரூபாய் எடுத்ததாகத் தகவல்கள் கிடைத்துள்ளன. இப்பெருந் தொகைப் பணத்தை வைத்து உலகளாவிய கள்ளக்கடத்தலினால் பல கோடிகள் சேர்க்கிறான். தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம் போராளிகள் நூற்றுக்கணக்கில் பிரான்ஸ், யோர்மனி, இத்தாலி, இந்தியா ஆகிய இடங்களில் கடத்தலில் அகப்பட்டுக்கொண்டு சிறையில் வாடுகின்றனர். இவர் பணத்தை வைத்து அரசியல்வாதிகள், செய்தித் தொடர்பினர், சூத்திரதாரிகளை விலைக்கு வேண்டி விடுதலை பேரில் வியாபாரம் நடத்தி வருகிறான்.

அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் முகுந்தனை வளர்த்துத் தமிழ் ஈழப் போராளிகளைப் பிளவுபடுத்தி தமிழர்களை என்றும் சிங்களவரின் அடிமைகளாய் வாழ வழிவகுத்து வருகிறார்.

1984 செப்டம்பர் மாதத்தில் வசந்தனும், நானும் இன்னும் மூன்று முன்னணிப் போராளிகளும் தமிழ் ஈரி மக்கள் விடுதலைக் கழகத்திலிருந்து வெளியேறினோம்.

1985–ல் மார்ச் மாதத்தில் இன்னும் பல போராளிகள் வெளியேறினர். இவர்களுக்கு எதிராகப் பல அபாண்டமான குற்றச்சாட்டுக்களை முகுந்தன் வெளியிட்டான்.

குற்றச்சாட்டுக்களுக்கு என் விளக்கத்தை 'முகுந்தனின் மூளைக் கோளாறு' என்ற கைநூலில் நான் வெளியிட்டேன்' மற்றும் போராளிகள் 'திப்பொறி'யிலும், புதியதோர் உலகம். என்ற புத்தகத்திலும் முகுந்தனின் கபட நாடகங்களை அம்பலப்படுத்தினர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


திம்புப் பேச்சுவார்த்தைகளில் இந்தியாவின் நண்பனாய் நடித்துத் தன் பலத்தைப் பெருக்கிய முகுந்தன் எங்களை அழிக்க முன்வந்திருக்கிறான்.

2.8.1985-ல் என்னைக் கடத்தித் துன்புறுத்தியவர்கள் வசந்தனைக் கடத்த வந்ததாயும் தவறுதலாய் என்னைக் கடத்தியதாயும் கூறி எனக்கு அச்சுறுத்தல் கொடுத்து விட்டனர்.

2.8.1985-ல் இரவு 11 30 மணிக்குத் திருமங்கலம் காவல் துறைக்குத் தகவல் கொடுத்தேன். பயனுள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டதாய்த் தோன்றவில்லை.

10 9.1985-ல் ஓர் தமிழ் ஈழப் பெண் மகாலிங்கபுரம் தமிழ் தகவல் நிலையத்துக்கு வந்து என்னை வசந்தனைச் சந்திக்க வேண்டும் என்று கேட்டார். வசந்தன் அங்கேயே இருந்ததால் நான் அவரை அறிமுகப் படுத்தினேன். வசந்தனை, அவர் தான் வசந்தன் என்று, பிள்ளையார் படத்தில் சத்தியம் செய்யக் கேட்டார். வசந்தன் தான் பிள்ளையாரிலும், கடவுளிலும் நம்பிக்கை அற்றவர்; சத்தியம் செய்வதில் அர்த்தமில்லை என்றார் வந்த பெண் காந்தீயத்திலும் பின் தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகத்திலும் இருந்த யூலியும் இன்னும் மூன்று பெண்களும் கழகத் தஞ்சாவூர் முகாமிலிருந்த வெளியேறி திருச்சியில் மறைவாய் இருப்பதாயும் அவர்களை வசந்தன் சந்திக்க வேண்டும் என்றும் கேட்டார். தன்னுடன் ஒரு பெண் வந்திருப்பதாயும் அவரை கொண்டு வருவதாயும் கூறினார்.

வசந்தன் இதை எனக்கு அறிவித்தார். நான் இது தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழக சூழ்ச்சி என்று கூறி அப்பெண்ணைத் தனிமையில் சந்திக்க வேண்டாம் என்றும் தேவைப்படின் தியாகராயநகரில் ஓர் நண்பர் வீட்டில் சந்திக்கவும் எச்சரித்தேன்.

அந்தப் பெண் தியாகராய நகர் வீட்டுக்குப் பலமுறை தனிமையாய் வந்து வசந்தனைத் தன்னுடன் வர வற்புறுத்தினார். வசந்தன் சம்மதிக்கவில்லை.

www.tamilarangam.net


18.9.1985-ல் சந்ததியார் கடத்தப்பட்டார். இரவு மட்டும் பார்த்து அவர் வராததால் 19.9.1985-ல் திருமங்களம் காவல் நிலையத்துக்கு தகவல் கொடுத்தோம்.

அவர்கள் வசந்தனைத் தேடி வந்த வந்த கே.கே. நகரி லிருப்பதையறிந்து பிடித்து வந்து விசாரித்தனர். அப்பெண் பல பொய்களைக் கூறினார். வசந்தன் தம்மிடம் ரூ 25,000/- வேண்டியதாயும் தலைமறைவாகி விட்டதாயும் காவல்துறை யினருக்குத் தெரிவித்தார்.

23 9.85 ,தினமணி'யில் தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகத்தவர் (PLOT) வசந்தன் இரண்டு பெண்களுடன் தொடர்பு வைத்திருந்தார் என்றும் சங்கடத்தால் தலைமறைவாகினார் என்றும் பேட்டி கொடுத்தனர். இதை மறுத்து உண்மையைத் 'தினமணி' ஆசியருக்கு நான் எழுதினேன். செய்தித்துறைப் பண்பாடுகளைப் புறக்கணித்து வசந்தன் முகத்தில் கரி பூச முற்பட்ட 'தினமணி' ஆசிரியர் ஏன் கடிதத்தை வெளியிட வில்லை?

காவல்துறையினர் தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOT) அங்கத்தவர்கள் ஆறு பேரை விசாரணைக்குத் திரு மங்கலம் காவல் நிலையத்தில் வைத்திருந்தனர். இவர்களை விடுதலை செய்யுமாறு அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அமைச்சர் இராசாராம் இடம் பரிந்து பேசியிருக்கிறார்.

தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOT) வசந்தனைக் கடத்திச் சென்றிருக்கிறது என்பதற்குப் போதிய ஆதாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இன்றுவரை தமிழகக் காவல்துறையால் வசந்தனைத் தேடிப் பிடிக்க முடியவில்லை. நான் போகும் இடங்களெல் லாம் மிகவும் சந்தேகத்துக்குரிய நபர்கள் தொடர்வதை அவ தானிக்கிறேன். எமது அச்சத்தை தமிழக முதலமைச்சர், காவல்துறை அதிபர்களுக்கு அறிவித்திருக்கிறேன்.

என்னைக் கடத்தி நான் தகவல் கொடுத்தவுடனே தமிழக காவல்துறை ஏற்ற நடவடிக்கை எடுத்திருந்தால்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


வசந்தனைக் காப்பாற்றியிருக்கலாம். இன்றாவது நடவடிக்கை எடுத்தால் இன்னும் பலருடைய உயிர்களைக் காப்பாற்றலாம்.

ஆனால் அரசியல் இலாபங்களுக்காகத் தமிழக, இந்திய மத்திய அரசும் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கமும் முகுந்தனுக்கு ஆதரவு கொடுத்து வளர்க்கின்றனர்.

அரசியல் இலாபங்களுக்காக அதர்மத்தை ஆதரிப்பதும், வளர்ப்பதும் அறியாமை, அநீதி என்பதைத் தலைவர் ள் அறியமாட்டார்களா?

கடந்த பதினைந்து வருடங்களாய் வசந்தன் இரவாய்ப், பகலாய்த் தமிழ் ஈழம் காணத் துடித்துத் தம்மை முற்றும் முழுதும் அர்ப்பணித்துச் செயல்பட்டார். இன்று அவர் காப்பாற்றிய முகுந்தனும், அவர் வளர்த்துவிட்ட கழகமும் அவருடைய உயிருக்கே ஆபத்தாகிவிட்டது. கொலை, கொள்ளை, கற்பழிப்பு, சித்திரவதை, கள்ளக்கடத்தல் மன்னன் முகுந்தன் தமிழ் ஈழத் தலைவராய்த் தோற்றமளிக்கிறார். தமிழ் ஈழத்துக்கு இது ஓர் சாபக்கேடு.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகத் தமிழ் ஈழத்துக்காக எம் முழு வாழ்வையும் தியாகம் செய்து உழைத்த நான் இன்று முகுந்தனின் உளவுக் கொலைக் கும்பலுக்கு அஞ்சி, வசந்தனைப் பிரிந்து கண்ணீரும் கம்பலையுமாகக் காலங் கழிக்கிறேன்.

எனது இறுதி முடிவாகத் தமிழக மக்களிடம் நீதி கோருகிறேன். வசந்தனை மீட்டுத்தாருங்கள்.

முகுந்தனின் கொலைகள் யாவும் விசாரணை செய்யப்பட்டு அவனுடைய கொலைக் கும்பல் தண்டிக்கப்படு மட்டும் நீதிக்காகப் போராடுங்கள்.

எழுதி வெளியிடுபவர் :-

ச. அ. டேவிட், B. Arch. Dip. T.P, A.R:I.B.A.,: A.R.T.P.I (Lond).) கட்டிடக் கலைஞர், நாடு நகரமைப்பாளர், தலைவர், காந்தீயம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முகுந்தனே



## பதில் சொல்!